வாடகை கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

ஆர்சிஓபி எண். 6/2014

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 15.06.2023 ம் தேதி மனுதாரர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே சாட்சியாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளேன். கீழ்க்கண்ட கூடுதல் ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.14 ஆகும்.

வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ம.சா.ஆ.15 ஆகும்.

மனுதாரரின் விசிட்டிங் கார்டு ம.சா.ஆ.16 ( கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்தை சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதாக கொள்ள முடியாது என ஆட்சேபித்தார். இந்த ஆட்சேபணை தீர்ப்பின்போது கவனத்தில் கொள்ளப்படும்)

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் சந்தோஷ் என்பவர் எடுத்தார்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ரேசன் கார்டில் சொல்லப்பட்ட விலாசத்தில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்தவறு. தற்சமயம் மனுவின் ஆவணங்கள் மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.